வழங்குகிறார்கள், அதுபோல தரை விரிப்பு செய்ய வசதி இல்லாவிட்டாலும். காலுறைகளையாவது வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலுறைகளை வழங்குவதோ, தரை விரிப்பு அமைப்பதோ எதுவுமே அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒரேயடியாக அடித்து விட்டால் பிரச்சினை கிடையாது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரையரங்குகளில் தமிழக அரசு செய்திப் படங்கள்

* 10120—திரு. வ. முல்லைவேந்தன்

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரும்பாலான திரையரங்குகளில் தமிழக அரசு செய்திப் படங்கள் காண்பிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு, கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கேற்ப திரைப்படம் காட்டியே பொருள் சேர்ப்பவர்கள், தமிழக அரசினுடைய செய்திப் படங்களைப் பெரும்பாலான திரையரங்கு

களில் காட்டுவதில்லை என்பது முற்றிலும் உண்மை. எனவே, இப்படிப்பட்ட திரையரங்குகளின் உரிமத்தை — படம் காட்டப்படாவிட்டால் ரத்து செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் சார்பாக ஒவ்வொரு முறையும் 146 பிரதிகள் எடுக்கப்பட்டு, அப்படி எடுக்கப் பட்ட பிரதிகளை மத்திய அரசின் சார்பாக விநியோகிக்கப்படு கின்ற பிரிவினிடம் தந்து அவர்கள்தான் மாநிலத்தில் இருக்கின்ற அத்தனை திரையரங்குகளுக்கும் விநியோகிக்கிறார்கள். இங்கிருக் கின்ற — தமிழ் நாட்டில் மொத்தம் 2,000-க்கும் மேற்பட்ட திரையரங்குகள் இருக்கின்ற காரணத்தால் 146 பிரதிகள் போதாது என்று சொல்லி, முதல்வரவர்கள் இந்த முறை மேலும் ஒரு 100 பிரதிகள் அதிகமா எடுக்க உத்தர விட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் விநியோகப் பிரிவிலிருந்து தரப்படுகின்ற—ஒவ்வொரு தியேட்டருக்கும் தரப்படுகின்ற பொழுது அதிகமான தியேட்டர்கள் இருக்கின்ற காரணத்தால், சரியான முறையில் விநியோகிக்க முடியவில்லை. அப்படி அவர்கள் விநியோகிப்பதற்காக ஒரு சதவீதம் தியேட்டர் காரர்களிடமிருந்து பெற்று நமது மாநிலத்திற்கு அரை சதவீதம் என்று தந்து கொண்டிருக்கிறார்கள். அப்படித் தருகின்ற தொகையே ஒரு வருஷத்திற்கு இருபது இலட்சத்திற்கு மேல் நமக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். பிரதிகளை அதிகப் படுத்தி, அத்தனை திரையரங்குகளிலும் இது காண்பிக்கப்படு கின்ற அளவிலே இந்த வருஷம் நடை முறைப்படுத்தப்படும். மேலும் பிரதிகள் வாங்கியும் அதைத் திரையிடாத திரையரங்கு களின் மீது ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் தொடர்பு அதிகாரி களிடம் சொல்லி, அதைக் கண்காணித்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக அந்தத் திரையரங்குகள் மீது நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு செய்திப் படம் திரையரங்குகளில் எவ்வளவு நேரம் காட்டப்பட வேண்டும் ? இந்த ஆண்டு எடுக்கப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

[1990 மே 12

9.50 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, ஒவ்வொரு திரையரங்கிலும் 10 நிமிடம் அது காண்பிக்கப்பட வேண்டும். இந்த ஆண்டு எடுக்கப்பட்ட படங்களின் எண்ணிக்கை பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் எத்தனை திரைப் படங்கள் என்பதைத் தெரிவிக்க இயலும்.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, முன்பெல்லாம் திரை அரங்கங்களில் திரைப்படம் முடிந்தவுடனே தேசியகீதம் இசைக்கப்படும். எல்லோரும் எழுந்து நிற்பார்கள். இப்போது அந்த வழக்கம் அடியோடு நின்று விட்டது. எனவே, மீண்டும் அந்த வழக்கத்தைக் கொண்டு வருவதற்கும், திரைப்படம் தொடங்குவதற்கு முன்னால் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப் பதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கே. என். நேரு : தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஆலோசனை செய்து, நடை முறைப் படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு செய்யும்.

திரு. என். பழனிவேல் ; தலைவர் அவர்களே, தமிழக அரசு செய்தித் துறை மூலமாக இந்த ஆண்டு டாக்டர் அம்பேத் கார் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக் கிறோம். ஒவ்வொரு தொகுதியிலும் சட்ட மன்ற உறுப்பினர் கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை திரைப்படமாக தயாரித்து தமிழக திரையரங்குகளில் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை கொண்டாட அமைக்கப் பட்ட உயர் மட்டக் குழு நேற்று முன் தினம் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் கூடி அம்பேத்கார் அவர்களின் புகழைப் பரப்புவதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக் கிறார்கள். அது பற்றிய இன்னொரு கேள்வி கூட வர இருக் கிறது. அப்போது அது பற்றி விளக்கமாகத் தெரிவிப்பேன்.

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட் டில் 2,000 திரை அரங்குகள் இருப்பதாகக் கூறிய அமைச்சர் அவர்கள். இப்போது 146 பிரதிகள்தான் தமிழக அரசின் செய்திப் படங்கள் எடுக்கப்படுகிறது என்று அறிவித்து இருக் கிறார்கள். நிச்சயமாக இது போதாது. எனவே, காட்டிய படங்கள் திரும்பத் திரும்ப மற்ற மாவட்டங்களில், மற்ற திரை யரங்கங்களில் காட்டப்படுகிறதா அல்லது குறிப்பிட்ட காலத் தோடு அந்த 146 பிரிண்டுகள் முடிந்து, புதிய பிரிண்டுகள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 146—ஆல் 2,000—ஐ வகுத்து விடுங்கள். சரியாகக் கணக்கு வந்து விடும்.

தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உறைவிந்து விநியோகம்.

* 4186— திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் ;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, கொட்டாம்பட்டி அல்லது மேலூரில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உறைவிந்து விநியோகம் செய்ய திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இது குறித்த விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விவர அறிக்கை

(அ) ஆம்.

(ஆ) மதுரை கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் முறையே மதுரை மற்றும் மேலூரில் செயல்பட்டு வருகின்றது. அதில். மேலூர், மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையத்தின்கீழ் 25 கிளை நிலையங்கள் செயல்படுகின்றன. இந்த 25 கிளை நிலையங்களில் 11 கிளை நிலையங்களில் மார்ச்சு 1988 முதலும், 3 கிளை நிலையங்களில் செப்டம்பர் 1988 முதலும், ஆக மொத்தம் 14 கிளை நிலையங்களில் உறை விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி செயல்பட்டு வருகின்றது.